இருக்கிறது. எந்த நேரத்திலும் அவர்களின் தேவைக்கேற்ப அது கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா : சுத்தமல்லி ஸ்கீம், வாட்டர் மானேஜ்மென்ட், ட்ரெயினேஜ், இவையெல்லாம் பகிர்ந்து கொடுக்கக்கூடிய நிலையில் நல்ல திட்டமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் செயல்படுத்த அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : வாட்டர் மானேஜ்மென்ட் ஸ்கீம் மட்டுமல்ல சாயில் கன்சர்வன்சி ஸ்கீமில் அது செய்யப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலும் பெரிய பெரிய வரப்புகள் இருந்து அதில் எலிகள் தங்குவதற்கு வாய்ப்புகள் இருந்தன. அதைப் போக்க சுத்தமல்லி ஸ்கீம் உருவாக்கப்பட்டு ஒழுங்காக வரப்புகள், வாய்க்கால்கள், எல்லாம் கவனிக்கப்பட்டு இன்று நல்ல முறையில் இருந்து வருகிறது. மேலும் தஞ்சை மாவட்டத்தில் அதை விஸ்தரிக்கத் திட்டமிருக்கிறது. மற்றப் பகுதிகளுக்கு விஸ்தரிப்பதற்குத் திட்டம் இப்போது இல்லே.

திரு. வை. பாலசுந்தரம் : சில நகராட்சிகளில் நகரப்பகுதிகளில் உலாவுகிற பெருச்சாளிகளைப் பிடிக்க காசு வழங்கப்படுகிறது. அதேபோல் நம் மாநகராட்சியிலும் கடைப்பிடிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அந்தப் பொறுப்பு மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களிடம் இருக்கிறது. அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

ஐயாவையனுற்றங்கரையோரச் சாலே

*** 625 வினு.—**திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் ஐயாவையனுறு ஆற்றுக் கரையில் தார்சாலே அமைத்திடும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இட்டப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]